RNI Number: TNBIL/2020/79792

TM

METRO PEOPLE

WEEKLY MAGAZINE

EVERY SUNDAY

ENGLISH & TAMIL WEEKLY MAGAZINE

ஞாயிறுதோறும்

ஆங்கிலம் மற்றும் தமிழ் வார இதழ்

06 நவம்பர் 2022 | மலர் 1 - இதழ் -8 | விலை - ரூ. 5/- | 24 பக்கங்கள்

06 NOVEMBER 2022 | VOLUME 1 - ISSUE -8 | PRICE - Rs.5/- | 24 PAGES

kotak General Insurance

Staying fit just got more rewarding. Kotak Health Premier is a comprehensive health insurance policy that comes with various value added benefits. It also helps you earn reward points for a healthy lifestyle.

PRODUCT HIGHLIGHTS

In-patient Treatment | Health & Rewards | Annual Health Check-up | Alternative Treatment | Cumulative Bonus | Restoration Benefit

Toll Free: 1800 266 4545 | Email: care@kotak.com | Website: www.kotakgeneralinsurance.com

Kotak Mahindra General Insurance Company Ltd.
Registered Office: 27 BKC, C 27, G Block, Bandra Kurla Complex, Bandra East, Mumbai – 400051. Maharashtra, India. **CIN: U66000MH2014PLC260291. IRDAI Regn. No 152.** Trade logo displayed above belongs to Kotak Mahindra Bank Ltd. and is used under license. The advertisement contains only an indication of the covers offered. For more details on risk factors, terms, conditions, coverages and exclusions, please read the sales brochures/policy wording carefully before concluding a sale.
Advt. ref. no: KGI/20-21/II/P-BN/1020. Kotak Health Premier UIN:KOTHLIP21065V032021.

M.K.STALIN FLAGS OFF PROJECT VITHAI – PEDIATRIC THERAPY ON WHEELS, AN INITIATIVE OF VARSHINI ILLAM TRUST

To extend access to quality and consistent therapy support for babies with development deficiencies from low income families or semi-urban/rural areas, Hon'ble Chief Minister of Tamilnadu, Thiru M K Stalin flagged of Project "Vithai – Pediatric Therapy on Wheels", an initiative of Varshini Illam Trust Project Vithai, the brain child of Founder Trustee, Ms P V Varshini, provides door step therapy services to babies in the 0-5 year age in low income and rural areas. Varshini Illam Trust has built a mobile Therapy van which is fully equipped with all therapy equipment and therapists who are trained to provide therapy for small children. The therapies offered are Cognitive Therapy, Speech Therapy, Play Therapy, Spastic Relieving Therapy to Sensory Development Therapy, Social Wellbeing Therapy and Coordination Therapy. This bus has been generously funded by Aptus Value Housing Finance India Ltd.

The dream of Ms P V Varshini is that this Project Vithai, with support from the Government and other donors, should touch and improve the quality of life of around 1000 babies over the next couple of years by taking free therapy services to their door step while also creating jobs for a large number of healthcare workers This project is commencing in OMR, Chennai covering colonies such as Kannagi Nagar, Semmanchery, Ezhil Nagar, Perumbakkam etc.

kotak life

Secure your family against the burden of loan repayment with our life insurance solutions.

Visit www.kotaklife.com or call us at 1800-209-8800 today.

Hum hain... hamesha

BEWARE OF SPURIOUS PHONE CALLS AND FICTITIOUS / FRAUDULENT OFFERS
IRDAI is not involved in activities like selling insurance policies, announcing bonus or investment of premiums. Public receiving such phone calls are requested to lodge a police complaint.

Kotak Mahindra Life Insurance Company Ltd. Regn. No.: 107, CIN: U66030MH2000PLC128503, Regd. Office: 2nd Floor, Plot # C- 12, G- Block, BKC, Bandra (E), Mumbai - 400051.
Website: https://www.kotaklife.com | WhatsApp: 9321003007 | Toll Free No. - 1800 209 8800. Ref. No.: KLI/21-22/P-BB/1478.
Trade Logo displayed above belongs to Kotak Mahindra Bank Limited and is used by Kotak Mahindra Life Insurance Company Ltd. under license.

அரசியல் செய்திகள்

வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு குறித்து முதல்வர் ஆய்வு 10 ஆண்டு சீரழிவை ஒன்றரை ஆண்டில் சரி செய்வோம் என நம்பிக்கை



வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளதையொட்டி, மாநிலஅவசரக் கட்டுப்பாட்டு மையத்தில் ஆய்வு மேற்கொண்ட முதல்வர் ஸ்டாலின், மக்களின் புகார்கள்மீது உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். மேலும், அதிமுக ஆட்சியில் 10 ஆண்டுகளில் தமிழகத்தைச் சீரழித்து விட்டதாகவும், ஒன்றரை ஆண்டுகளில் அதை சரி செய்து விடுவோம் என்றும் முதல்வர் நம்பிக்கை தெரிவித்தார். வடகிழக்குப் பருவமழை தொடங்கியதையடுத்து, தமிழகத்தி-ல் கடந்த சில தினங்களாக பரவலாக கனமழை பெய்து வருகிறது. இதையொட்டி எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாக, சேப்பாக்கம் எழிலகம் வளாகத்தில் உள்ள மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று ஆய்வு மேற் கொண்டார். புகார் மீது உடனடி நடவடிக்கை: அப்போது, மாவட்ட ஆட்சியர்கள், பொதுமக்களுக்கு அனுப்ப வேண்டிய முன்னெச்சரிக்கை செய்திகளை உடனடியாக அனுப்புமாறும், '1070' என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாக வரும் புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், நிலுவையில் உள்ள 70 புகார்களுக்கு உரிய தீர்வுகாணும்படியும் முதல்வர் உத்தரவிட்டார். இதுதவிர, திருவள்ளூர், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர்கள், ஆவடி மற்றும் தாம்பரம் மாநகராட்சி ஆணையர்களைத் தொடர்புகொண்டு, களநிலவரத்தைக் கேட்டறிந்து, நிவாரண நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு உத்தர விட்டார். மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்தைத் தொடர்புகொண்ட பொதுமக்களிடமும் தொலைபேசி மூலம் உரையாடி, அவர்களது கோரிக்கைகளைக் கேட்டறிந்து, அவற்றின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார். முதல்வருக்கு மக்கள் நன்றி: அப்போது, வெள்ளப் பாதிப்பு குறித்து புகார் தெரிவிக்கப்பட்டவுடன், அரசு துரிதமாகச் செயல்பட்டு, பாதிப்புகளுக்கு உரிய தீர்வுகண்டு வருவதற்காக முதல்வருக்கு, பொதுமக்கள் நன்றி தெரிவித்துக் கொண்டனர். ஆய்வின்போது, அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, சாத்தூர் ராமச்சந்திரன், வருவாய் நிர்வாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர், வருவாய்த் துறைச் செயலர் குமார் ஜெயந்த், பேரிடர் மேலாண்மை இயக்குநர் சி.அ.ராமன் உடனிருந்தனர். ஆய்வு முடிந்து வெளியே வந்த முதல்வர், செய்தியாளர்களிடம் கூறியதாவது: வடசென்னையில் சில பகுதிகளில் தண்ணீர் தேங்கியிருக்கும் தகவல்கள் கிடைத்தன. தேங்கியதண்ணீரை உடனுக்குடன் அப்புறப்படுத்திக் கொண்டிருக்கிறோம். கடந்த முறை போல இல்லாமல், தண்ணீர் எங்கேயும் பெரியஅளவில் தேங்கி நிற்கவில்லை என்று எல்லோரும் தெரிவிக்கின்றனர். தியாகராய நகர் போன்ற பகுதிகளில்கூட தண்ணீர் தேங்கவில்லை. சில இடங்களில் மட்டும் தேங்கியது. அதையும் சரி செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. 10 ஆண்டு அதிமுக ஆட்சியில்...: கடந்த 10 ஆண்டுகளாக அதிமுகஆட்சியில் சென்னையை மட்டுமல்ல, தமிழகத்தையே சீரழித்துவிட்டுச் சென்றிருக்கின்றனர். அதைசரி செய்ய வேண்டும் என்றால், அதிக ஆண்டுகளாகும். ஆனாலும், நாங்கள் ஒன்றரை ஆண்டுகளுக்குள் சீரமைப்புப் பணிகளை முடித்து விடுவோம் என்ற நம்பிக்கை உள்ளது. இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

சென்னையில் சாலை பள்ளங்களை தற்காலிகமாக சீரமைக்க துரித நடவடிக்கை: அமைச்சர் கே.என்.நேரு தகவல்

சென்னையில் சாலையில் உள்ள பள்ளங்கள் தற்காலிகமாக சீர்செய்யும் பணி துரிதமாக நடைபெற்று வருவதாக அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார். சென்னையில் மழைக்கால மருத்துவ முகாம்களை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து பேசிய அவர், 'கடந்த ஆண்டு ஏற்பட்ட பெருமழையின் காரணமாக சென்னை மாநகரின் பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளானார்கள். முதல்வர் மழை வெள்ள பாதிப்புகளை நாள்தோறும் நேரடியாகப் பார்வையிட்டு ஆய்வு செய்து நிரந்தரத் தீர்வு ஏற்படுத்தப்படும் எனத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து வல்லுநர் குழு அமைத்து அக்குழுவின் பரிந்துரைகளின்படி மழைநீர் வடிகால் பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இரண்டாண்டு காலத்தில் முடிக்கக் கூடிய பணிகளை 6 மாத காலத்தில் விரைந்து முடித்த காரணத்தினால் இந்த ஆண்டு பருவமழையில் பெரும்பாலான இடங்களில் மழைநீர் தேக்கம் இல்லை. மழைநீர் தேங்கிய ஒரு சில இடங்களிலும் நிரந்தரத் தீர்வினை ஏற்படுத்த முதல்வர் உத்தரவிட்டுள்ளார். அதற்கான பூர்வாங்கப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. தற்சமயம் பெய்துள்ள மழையின் காரணமாக பிளாஸ்டிக் போன்ற திடக்கழிவுகள் மழைநீர் வடிகால்களில் தேங்கியிருக்க வாய்ப்புள்ளது. எனவே, மழைநீர் வடிகால்கள் மற்றும் நீர்வழிக் கால்வாய்களில் தேங்கியுள்ள திடக்கழிவுகளை அகற்றும் பணி, மாநகராட்சியின் சார்பில் உடனடியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சாலைகளில் உள்ள பள்ளங்கள் தற்காலிகமாக சீர்செய்யும் பணிகளும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. பருவமழைக்குப் பின்னர் பழுதடைந்துள்ள அனைத்து சாலைகளும் முழுமையாக சீர்செய்யப்படும். சென்னையில் 27,000 சாலைகள் உள்ளன. அதனை சீர்செய்ய ரூ.8,500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மட்டும் ரூ.2400 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் மழைக்காலம் முடிந்ததும் சாலைகள் உறுதியாக சீர்செய்யப்படும்' என்று அமைச்சர் கூறினார்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாக கொண்டிருக்கின்றன. அதுபோல உலகம் கடவுளை அடிப்படையாக கொண்டிருக்கிறது.

RNI Number: TNBIL/2020/79792

TM

METRO PEOPLE

WEEKLY MAGAZINE

EVERY SUNDAY

ENGLISH & TAMIL WEEKLY MAGAZINE

ஞாயிறுதோறும்

ஆங்கிலம் மற்றும் தமிழ் வார இதழ்

06 நவம்பர் 2022 | மலர் 1 - இதழ் -8 | விலை - ரூ. 5/- | 24 பக்கங்கள்

06 NOVEMBER 2022 | VOLUME 1 - ISSUE -8 | PRICE - Rs.5/- | 24 PAGES

Sabse Pehle Life Insurance

LIFE KE PUZZLE KA SOLUTION

A Customer Awareness Initiative By

Star Union Dai-ichi Life Insurance

A joint venture of

Bank of India | Union Bank of India | Dai-ichi Life

Star Union Dai-ichi Life Insurance Company Limited | IRDAI Regn. No: 142 | CIN: U66010MH2007PLC174472
Registered Office: 11th Floor, Vishwaroop I.T. Park, Plot No. 34, 35 & 38, Sector 30A of IIP, Vashi, Navi Mumbai-400 703 | Contact No: +91 22 7196 6200 (charges apply) | 1800 266 8833 (Toll Free) | Timing: 9:30 am – 6:30 pm (Mon – Sat) | Email ID: customercare@sudlife.in | Visit: www.sudlife.in | Trade-logo displayed belongs to M/s Bank of India, M/s Union Bank of India and M/s Dai-ichi Life International Holdings LLC and are being used by Star Union Dai-ichi Life Insurance Co. Ltd. under license.

BEWARE OF SPURIOUS/FRAUD PHONE CALLS: IRDAI is not involved in activities like selling insurance policies, announcing bonus or investment of premiums. Public receiving such phone calls are requested to lodge a police complaint.

SUD-HO-03-21-1556

INTRODUCING

niva Bupa Health Insurance

(formerly known as Max Bupa Health Insurance Co. Ltd.)

Max Bupa's new avatar, Niva Bupa brings in a new era for India. An era in which health insurance is not merely a tool to help you with your claims in the event of injury and hospitalisation. Instead, it's what sets you free. Free to claim the assurance of good health. Free to claim the confidence to step out and do the things you dream of. And, to claim the countless magical moments that life has to offer.

Watch our new brand film

Zindagi ko claim kar le

30 Minutes** Cashless Claim Processing

Digital Claim Reimbursement

7900+ Network Hospitals#

Niva Bupa Health App

Zindagi ko claim kar le

Say 'Hi' to us on WhatsApp: 9811956696

Customer Helpline No.: 1860-500-8888

Website: www.nivabupa.com

Niva Bupa Health Insurance Company Limited (formerly known as Max Bupa Health Insurance Company Limited) IRDAI Reg. No. 145. 'Bupa' and 'HEARTBEAT' logo are registered trademarks of their respective owners and are being used by Niva Bupa Health Insurance Company Limited under license. Registered Office: C-98, First Floor, Lajpat Nagar 1, New Delhi-110024. CIN U66000DL2008PLC182918. Website: www.nivabupa.com. Fax: + 91 11 30902010. Customer Helpline No.: 1860-500-8888. **Niva Bupa processes pre-auth within 30 minutes for all active policies, subject to receiving all documents and information(s) up to Niva Bupa's satisfaction. The above commitment does not include pre-authorization settlement at the time of discharge or system outage. #Number of network hospitals shown is an approximate figure and is subject to change without prior notice, please visit our website to access latest and updated list of network hospitals. For more details on terms and

அரசியல் செய்திகள்

தஞ்சாவூரில் மாமன்னன் ராஜராஜசோழனின் 1037 வது சதய விழா

தஞ்சாவூரில் மாமன்னன் ராஜராஜ சோழனின் 1037 வது சதய விழாவை முன்னிட்டு, (நவ.3) காலை அவரது உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. தஞ்சாவூர் பெரியகோயிலை கட்டிய மாமன்னன் ராஜராஜசோழன் ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தில் பிறந்த நிலையில், ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மாதத்தில் வரும் சதய நட்சத்திரத்தில் வெகு விமர்சையாக சதய விழா கொண்டப்பட்டு வருகிறது. அதன்படி, இந்தாண்டு சதய விழா (நவ.2) பல்வேறு நிகழ்ச்சியுடன் விழா தொடங்கியது. இதைத்தொடர்ந்து, (நவ.3) காலை மங்கல இசையுடன் விழா தொடங்கியது. பின்னர், தருமபுர ஆதீனம் 27 வது குருமகா சன்னிதானம் ஸ்ரீ ல ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் திருக்கோயில் பணியாளர்களுக்கு புத்தாடை வழங்கினார். தொடர்ந்து, ராஜராஜ சோழன் மீட்டெடுத்த, தேவார நூல்களுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர்,

தேவார நூல்களை யானை மீது ஏற்றி, மங்கல வாத்தியங்கள், சிவ பூத இசைக்கருவிகள் வாசிக்கப்பட்டு, கோயிலில் இருந்து தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த 48 ஓதுவார்கள், திருமுறை வீதிகளாக தேவாரம் பாடியபடி, கோயிலுக்கு வெளியே உள்ள ராஜராஜ சோழன் சிலையை சென்றடைந்தனர். அங்கு, மாமன்னன் ராஜராஜசோழன் சிலைக்கு மாவட்ட நிர்வாகம், சதய விழா குழு, அரண்மனை தேவஸ்தானம் சார்பில், மாவட்ட ஆட்சியர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரவளி பிரியா, சதய விழா குழு தலைவர் செல்வம், அரண்மனை தேவஸ்தான பரம்பரை அறங்காவலர் பாபாஜி ராஜா பான்ஸ்லே, திருவையாறு எம்எல்ஏ துரை. சந்திரசேகரன், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண். ராமநாதன் உள்ளிட்டார் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தொடர்ந்து, நாள் முழுவதும் 70க்கும் மேற்பட்ட பல்வேறு அமைப்புகள், அரசியல் கட்சியினர் சார்பில் ராஜராஜசோழன் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. பெரிய கோயிலில், குஜராத்திலிருந்து மீட்டு கொண்டு வரப்பட்ட ராஜராஜசோழன், உலகமாதேவி உலோகசிலைகள் முன்பாக புனித நீர் அடங்கிய கடங்கள் வைத்து சிவச்சாரியர்கள் சிறப்பு யாகம் நடத்தினர். அப்போது, ராஜராஜ சோழன், உலகமாதேவி சிலைக்கு ராஜா ராணி அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து, பெருவுடையாருக்கும், பெரியநாயகி அம்மனுக்கும் மஞ்சள், சந்தனம், பால், தயிர் உள்ளிட்ட 48 மங்கள பொருட்களால் பேரபிஷேகமும், மகா தீபாராதனையும் நடைபெற்றது. தொடர்ந்து மாலை பல்வேறு நிகழ்ச்சிகளும், இரவு ராஜராஜசோழன் மற்றும் உலகமாதேவிக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு வீதி உலாவுடன் நிகழ்ச்சி நிறைவு பெறுகிறது.

அனைத்து துறைகளிலும் இந்தியா வளர்ச்சி அடைய இளைஞர்களின் ஒத்துழைப்பு அவசியம்: மத்திய அமைச்சர் சர்பானந்த சோனாவால் கருத்து

நாட்டின் வளர்ச்சிக்கு இளைஞர்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று மத்திய அமைச்சர் சர்பானந்த சோனாவால் தெரிவித்தார். இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின் 7-வது பட்டமளிப்பு விழா, சென்னையை அடுத்த உத்தண்டியில் உள்ள பல்கலை. வளாகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் சர்பானந்த சோனாவால், மத்திய இணை அமைச்சர் ஷ்ரிபத் நாயக் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர். கடல் சார்ந்த இளநிலை பட்டப்படிப்பு, தொழில்நுட்ப படிப்பு முடித்த 3,580 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. விழாவில் மத்திய அமைச்சர் சர்பானந்த சோனாவால் பேசியதாவது: பட்டம் பெற்ற மாணவர்கள் அனைவரும் இந்தியாவின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். கடல் சார்ந்த படிப்பு பயின்ற மாணவர்கள், தற்சார்பு இந்தியா திட்டத்தை செயல்படுத்த

நாட்டுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். மத்திய கப்பல் நீர்வழிப் போக்குவரத்து துறை அமைச்சகம் 2030 தொலைநோக்கு திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கடல்சார் வணிகம், கல்வி, ஆராய்ச்சியில் முன்னணி நாடாக இந்தியா மாறும். இந்த திட்டத்தின்படி, உலகத் தரம் வாய்ந்த துறைமுகங்களை உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. 2030-ம் ஆண்டுக்குள் உலகளாவிய கடல்வழி வாணிப பங்கை12-ல் இருந்து 20 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, பல்வேறு வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. கடல் சார்ந்த துறைகளிலும் வேலைவாய்ப்புகள் அதிகம் உள்ளன. மாணவர்கள் அவற்றை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்திய பாரம்பரிய மருத்துவ முறைகளை உலகின் 170 நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. நாட்டின் பாரம்பரிய மருந்துகள் ஏற்றுமதி 2014-ம் ஆண்டு 3 பில்லியன் டாலராக இருந்தது. கடந்த 8 ஆண்டுகளில், அந்த எண்ணிக்கை 18.2 பில்லியன் டாலர்களாக உயர்ந்துள்ளது. அனைத்து துறைகளிலும் இந்தியா வளர்ச்சி அடைய மாணவர்கள், இளைஞர்களின் ஒத்துழைப்பு அவசியம். இவ்வாறு அவர் பேசினார். அதைத் தொடர்ந்து கடல்சார் ஆராய்ச்சிக்கான மையத்தை அமைச்சர் சர்பானந்த சோனாவால் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சிகளில் கடல்சார் பல்கலைக்கழக துணைவேந்தர் மாலினி சங்கர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்

தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளை தொழாமல் இருப்பாரானால், அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன?

அரசியல் செய்திகள்

விரும்பினால் படிக்கலாம் இந்தியை யாரிடமும் திணிக்கவில்லை அண்ணாமலை கருத்து

விருப்பம் இருந்தால் இந்தி படிக்கலாம். இந்தியை யாரிடமும் திணிக்கவில்லை என்று பாஜக தலைவர் அண்ணாமலை தெரிவித்தார். தமிழகத்தில் வளர்ந்துவரும் அரசியல் தலைவர்களுக்கான அரசியல் தலைமை, வியூகம் மற்றும் தொடர்பு பற்றிய 3 நாள் பயிற்சி பட்டறையின் தொடக்க நிகழ்ச்சி சென்னை தியாகராய நகரில்நேற்று நடைபெற்றது. இதில் இளைஞர்கள், அரசியல் ஆர்வலர்கள், ஓய்வுபெற்ற அரசு அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஆஸ்தர் நிறுவனம் சார்பில் நடந்த இந்த பயிற்சி பட்டறைக்கு அரசியல் வியூக வகுப்பாளர் ஆஸ்பயர் கே.சுவாமிநாதன் தலைமை வகித்தார். பாஜக மாநில தலைவர் அண்ணாமலை, மூத்த பத்திரிகையாளர் 'துக்ளக்' ரமேஷ் கலந்துகொண்டு அரசியல் தலைமைத்துவம் குறித்து உரையாற்றினர். அப்போது, அண்ணாமலை பேசியதாவது: உளவியல், வரலாறு, புவியியல்உள்ளிட்ட பல்வேறு படிப்புகள் படித்திருந்தாலும்கூட, அரசியல் அறிவியல் படிப்பு என்பது அனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. ஓர் அரசியல்வாதி தனது பணியில் வெற்றி பெறுவதற்கு ஒரு கருவி தேவைப்படுகிறது. அதற்கான முயற்சிதான் இந்த பயிற்சி பட்டறை. ராணுவம், கார்ப்பரேட், சிவில் சர்வீஸ் உள்ளிட்ட ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தலைமைத்துவம் இருக்கிறது. தமிழகத்தில் காமராஜர், எம்ஜிஆர், கருணாநிதி, ஜெயலலிதா, ஓமந்தூரார் உள்ளிட்ட நிறைய ஜாம்பவான்கள் இருந்துள்ளனர். இவர்கள் அந்தந்த காலகட்டத்தில் அவர்களுக்கே உரிய தலைமைத்துவத்தில் வெற்றி கண்டுள்ளனர். ஆனால், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமா ஆகிய 2 அரசியல் தலைவர்களும் அசாதாரணமான சூழ்நிலையில், அரசியலுக்குள் நுழைந்து தங்களை, உருவாக்கி, செதுக்கி, 10 ஆண்டுகாலத்தில் உச்சகட்ட நிலையை அடைந்தவர்கள். ஒரு தலைமையின் மிகப்பெரிய வேலை, மற்றொரு தலைமையை உருவாக்குவதுதான். அரசியலுக்கு ஒருவர் வரும்போது, அது நமக்கு தேவையா என யோசித்து முடிவெடுக்க வேண்டும். சரியாகமுடிவெடுக்காத பல அரசியல்வாதிகள் அரசியலில் தோல்வியைசந்திக்கின்றனர். பல அரசியல்வாதிகள் தங்கள் முகத்தை திரை கொண்டு மறைத்து விடுகின்றனர். வெளிப்படை தன்மையுடன் இருந்தால்தான் அரசியலில் வெற்றி பெறமுடியும். புதிய கல்விக் கொள்கை குறித்து கஸ்தூரி ரங்கன் தலைமையிலான குழு சமர்ப்பித்த அறிக்கையில் இந்தியை கட்டாய மொழியாக்கவேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால், அமைச்சரவை 3-வது விருப்ப மொழியாகத்தான் இந்தியை கொண்டு வந்தது. பாஜக,யாரிடமும் இந்தியை திணிக்கவில்லை. திணிக்கவும் செய்யாது. இவ்வாறு அவர் பேசினார்.

வடபழனி 100 அடி சாலையில் ரெடிமேட் முறையில் மழைநீர் கால்வாய்

வடபழனி 100 அடி சாலையில் ரெடிமேட் முறையில் ஒரே இரவில் மழைநீர் கால்வாய் கட்டமைப்பை நெடுஞசாலைத்துறை அதிகாரிகள் அமைத்தனர். வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில் சென்னையின் பல்வேறு பகுதிகளில் கடந்த இரண்டு நாட்களாக கனமழை கொட்டிதீர்த்து வருகிறது. சென்னை வடபழனி 100 அடி சாலை அரும்பாக்கம் அருகே நேற்று முழங்கால் அளவிற்கு மழைநீர் தேங்கி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து முதற்கட்டமாக வடபழனி 100 அடி சாலையில் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர். இதனைத் தொடர்ந்து நேற்று ஒரே நாள் இரவில் 50க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்டு சாலையில் 10 அடி பள்ளம் தோண்டி மழை நீர் வடிகால்வாய் கட்டமைப்பை உருவாக்கினர். மேலும் சாலையில் இருக்கும் மழை நீரை உயர் ரக குதிரை திறன் கொண்ட மோட்டார் பம்புகள் மூலம் நீரை உறிஞ்சி வடிகால் வாய் மூலம் அரும்பாக்கம் கால்வாய்க்கு விட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மகளிர் குழுவுக்கு இனி ரூ.20 லட்சம் வரை கடனுதவி: அமைச்சர் ஐ.பெரியசாமி தகவல்

அமைச்சர் ஐ.பெரியசாமி திண்டுக்கல்லில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் சுய உதவிக் குழுக் களுக்கு இன்னும் ஒரு வாரத்தில் மீண்டும் கடன் வழங்கப்பட உள்ளது. தற்போது தள்ளுபடி செய்த கடன்களுக்குரிய தணிக்கை பணி பாதி முடிந்துவிட்டது. இன்னும் ஒரு வாரத்தில் அனைத்துப் பணிகளும் முடிவடைந்துவிடும். ஏற்கெனவே முதல்வர் ஸ்டாலின் சுய உதவி குழுக்களுக்கான ரூ.2 ஆயிரத்து 785 கோடி வரை கடனை தள்ளுபடி செய்துள்ளார். இந்நிலையில், மீண்டும் சுய உதவி குழுக்களுக்கு கடன் வழங்கப்பட உள்ளது. கடந்த காலங்களில் ரூ.10 லட்சம் வரை கடன் வழங்கப்பட்டது. தற்போது ரூ.20 லட்சமாக கடன் தொகை உயர்த்தி வழங்கப்படவுள்ளது. குடும்பத் தலைவிக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்க முதல்வர் விரைவில் அறிவிப்பு வெளியிடுவார். இவ்வாறு அமைச்சர் கூறினார்.

METRO PEOPLE™
WEEKLY MAGAZINE
விளம்பரங்கள்
வரவேற்கப்படுகின்றன உங்கள் விளம்பர தேவைக்கு எங்களை தொடர்பு கொள்ளவும்
75500 01222
73054 62666

மலர்மிசை ஏகினோன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்

அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் கடவுளின் சிறந்த திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர், இன்ப உலகில் நிலைத்து வாழ்வார்

அரசியல் செய்திகள்

மக்கள் மீது அக்கறையுடன் மழைக் களத்துக்கு வந்தாரா இபிஎஸ் - அமைச்சர் சேகர்பாபு பதிலடி

‘பெருமழை பாதிப்பு என்று கூறும் எடப்பாடி பழனிசாமி, மக்கள் மீது அக்கறை கொண்டு, களத்திற்கு வந்து நிவாரணப் பணிகளை மேற்கொண்டாரா?‘ என்று இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு கேள்வி எழுப்பியுள்ளார். சென்னையில் திரு.வி.க.மண்டலத்தில் மழைநீர் தடுப்பு குறித்த ஆய்வுக் கூட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு பங்கேற்றார். பின்னர் செய்தியாளர்களை அவர் கூறும்போது, ‘இந்த மழைக்கு சென்னை மாநகராட்சியில் ஒரு சொட்டு தண்ணீர்கூட தேங்கி நிற்கவில்லை. தமிழக முதல்வரின் ஓராண்டுகால தொடர் நடவடிக்கைகளால் இந்தச் சூழ்நிலை உருவாகியுள்ளது. தண்ணீர் தேங்கியிருந்த தாழ்வான பகுதிகளில் இருந்துகூட 90 முதல் 95 சதவீத தண்ணீர் தற்போது அகற்றப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளில் வருகின்ற ஆண்டுகளில் தண்ணீர் தேங்காதவாறு போர்க்கால அடிப்படையில் முதல்வர் நடவடிக்கை எடுப்பார்‘ என்று கூறினார். அப்போது அவரிடம் எதிர்க்கட்சித் தலைவர் இபிஎஸ் அறிக்கையைச் சுட்டிக்காட்டு கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர், ‘பெருமழை பாதிப்பு

என்று கூறும் எடப்பாடி பழனிசாமி, 3, 4 நாட்கள் மழையின் கால அளவு நீடித்துக்கொண்டிருக்கிறதே... மக்கள் மீது அவர் அக்கறை கொண்டிருந்தால், எங்காவது சுற்றித் திரிந்திருக்க வேண்டும். அவர் எங்காவது வந்தாரா? நிவாரணப் பணிகளை மேற்கொண்டாரா? 10 ஆண்டு காலம் மாநகராட்சியை சீரழித்தார்கள். கமிஷன், கலெக்ஷன், கரப்ஷன்... இதை மையப்படுத்தி கொசஸ்தலை பேசின் திட்டத்தில் ரூ.3500 கோடி அளவுக்கு டெண்டர் விட்டார்கள். அந்தப் பணிகள் திமுக ஆட்சிப் பொறுப்பேற்கும் வரையில் தொடங்கவில்லை. 700 கி.மீ அளவிலான அந்த பணியில் ஓராண்டில் 40 சதவீத பணிகளை முடித்துள்ளோம். மேலும், அவரது அறிக்கையில், 4 ஆண்டுகளில் 176 கி.மீட்டர் அளவுக்கு மழைநீர் கால்வாய் கட்டியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். ஆனால், தமிழக முதல்வர் ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு, 200 கி.மீட்டர் நீளத்திற்கு சுமார் ரூ.700 கோடி ரூபாய் அளவிலே திட்டத்தை தீட்டியுள்ளார். அதில், இன்றுவரையில், 156 கி.மீட்டர் நீளமுள்ள மழைநீர் கால்வாய் பணிகளை முடித்துள்ளார்‘ என்று அவர் கூறினார். முன்னதாக, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இபிஎஸ் வெளியிட்ட அறிக்கையில், இந்த ஆண்டு பருவ மழை தொடங்கிய முதல் நாளிலேயே சென்னை தத்தளித்ததற்கான காரணம் வெள்ள நீர் கால்வாயில் இந்த ஆண்டுக்குள் முடிக்க வேண்டிய பணியை தொடராமலும், திட்டமிட்டு முழுமையாக முடிக்காததாலும், வெள்ள நீர் போக முடியாமல் நிறைய இடங்களில் தேங்கியுள்ளது. இன்னும் பெருமளவில் பருவ மழை, புயல் போன்ற இயற்கை சீற்றங்கள் வருவதற்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. திமுக ஆட்சிக்கு வந்து 18 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில், இனியும் எதற்கெடுத்தாலும் அதிமுக அரசின் மீது குற்றம் சொல்லி பிரச்சினைகளை திசை திருப்பாமல், மழை வெள்ளத்தால் பாதிக்கப்படும் அனைத்து மக்களையும் காக்கும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கடமை இந்த திமுக அரசுக்கு உண்டு. மேலும், எதிர்காலத்தில் இது போன்ற நிலை ஏற்படாமல் இருக்க முறையான வழிமுறைகளை கையாள வேண்டும் என்று 4 பக்க அறிக்கையை வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

கழிவுநீர், மருத்துவக் கழிவு ஏற்றிச் செல்லும் வாகனங்களில் ஜிபிஎஸ் கருவி - அமைச்சர் மெய்யநாதன் அறிவுறுத்தல்

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க கழிவுநீர், மருத்துவக் கழிவுகளை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் விதிமீறல்களில் ஈடுபடுவதை தடுக்க அவற்றில் ஜிபிஎஸ் கருவிகளை பொருத்த வேண்டும் என்று மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகளுக்கு அமைச்சர் மெய்யநாதன் அறிவுறுத்தியுள்ளார். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மற்றும் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் துறை தொடர்பாக சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் தற்போதைய நிலை மற்றும் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறைச் செயலர் சுப்ரியா சாஹூ, வாரியத் தலைவர் ஆர்.ஜெயந்தி முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் அமைச்சர் மெய்யநாதன் பேசியதாவது: மஞ்சப் பை விழிப்புணர்வுப் பிரச்சாரம் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதந்தோறும் செயல்படுத்த வேண்டும். மருத்துவக் கழிவு மேலாண்மை வாகனம் மற்றும் கழிவுநீர் கொண்டு செல்லும் வாகனங்களின் செயல்பாடுகளை ஜிபிஎஸ் கருவி பொருத்தி கண்காணிக்க வேண்டும். கழிவுநீரை சட்டவிரோதமாக நீர் நிலைகளில் வெளியேற்றிய வாகனங்களின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டதை விளம்பரப்படுத்த வேண்டும். 5 லட்சம் பனை விதைகளை கடலோர மாவட்டங்களில் விதைக்க வேண்டும். கடலோரப் பகுதிகளில் அலையாற்றிக் காடுகளை வளர்க்க வேண்டும். பசுமை பள்ளிக்கூடத் திட்டம் மற்றும் பசுமைக் கோயில் திட்டத்துக்கான வழிமுறைகளை விரைவில் கண்டறிந்து செயல்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் அறிவுறுத்தினார். தேசிய அளவில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பைகளுக்கு எதிரான மீண்டும் மஞ்சப் பை விழிப்புணர்வு பிரச்சாரத்துக்கான ஸ்காச் (ரீலுநுளீக்ஷி) விருது, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்துக்கு கிடைத்துள்ளது. அந்த விருதை அரசுச் செயலர் சுப்ரியா சாஹூ, அமைச்சர் மெய்யநாதனிடம் காண்பித்தார். இதையடுத்து, வாரிய அதிகாரிகளை அமைச்சர் பாராட்டினார்.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது

தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் அல்லாமல், மற்றவர்க்கு மனக்கவலையை மாற்ற முடியாது

தொழில்நுட்பச் செய்திகள்

வாட்ஸ்அப் அறிமுகம் செய்துள்ள 4 புதிய அம்சங்கள் - ஒரு பார்வை

இன்ஸ்டன்ட் முறையில் மெசேஜ் செய்ய உதவும் தளமான வாட்ஸ்அப் செயலியில் நான்கு புதிய அம்சங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. கம்யூனிட்டிஸ், குழுவில் 1024 பேர் வரை சாட் செய்யும் வசதி, வாக்கெடுப்பு நடத்தும் அம்சம் போன்றவை இதில் அடங்கும். இன்ஸ்டன்ட் மெசேஜிங் தளமான வாட்ஸ்அப் மெசேஞ்சரை உலக அளவில் சுமார் 200 கோடி பயனர்கள் பயன்படுத்தி வருகின்றனர். டெக்ஸ்ட் மெசேஜ், போட்டோ, வீடியோ, ஆடியோ மற்றும் அழைப்புகள் மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வருகிறது இந்தத் தளம். பள்ளிக்கூடம் தொடங்கி அலுவலகம் வரையில் இப்போது குழுக்களாக ஒருவருக்கு ஒருவர், ஒருவருக்கு பலர் என இதன் மூலம் தகவல்களை பரிமாற்றிக் கொண்டு வருகின்றனர். தங்களது பயனர்களுக்கு தனித்துவமான பயன்பாட்டு திருப்தியை வழங்கும்

விதமாக அவ்வப்போது புதிய அப்டேட் மற்றும் அம்சங்களை வாட்ஸ்அப் அறிமுகம் செய்து வருகிறது. கம்யூனிட்டிஸ்: கடந்த ஏப்ரல் வாக்கில் கம்யூனிட்டிஸ் என்ற அம்சத்தை அறிமுக செய்வதற்கான பணிகள் நடந்து வருவதாக மெட்டா தெரிவித்தது. இப்போது அதனை அனைத்து பயனர்களும் பயன்படுத்தும் வகையில் வாட்ஸ்அப் தளத்தில் அறிமுகமாகி உள்ளது. படிப்படியாக அனைத்து பயனர்களுக்கும் இது ரோல் அவுட் செய்யப்படும் என தெரிகிறது.

பல்வேறு வாட்ஸ்அப் குழுக்களை ஒரே குடையின் கீழ் இணைக்க உதவுகிறது கம்யூனிட்டிஸ். உதாரணமாக ஒரு பள்ளி என்றால் அதில் இயங்கும் மாணவர்கள் குழு, ஆசிரியர்கள் குழு, பெற்றோர்கள் குழு என அனைத்தையும் கம்யூனிட்டிஸ் மூலம் இணைக்கலாம். இதற்கென உள்ள பிரத்யேக டேப் மூலம் பயனர்கள் கம்யூனிட்டிஸ்களை உருவாக்கலாம். ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள குழுக்கள் மற்றும் புதிதாக குழுக்களை உருவாக்கியும் இதில் சேர்க்கலாம். இது தவிர வாட்ஸ்அப்பில் சாட் மூலம் வாக்கெடுப்பு நடத்தும் அம்சம், 32 நபர்கள் வரையில் வாட்ஸ்அப் வீடியோ கால் மேற்கொள்ளும் அம்சம் மற்றும் 1024 நபர்கள் வரையில் ஒரே வாட்ஸ்அப் குழுக்களில் இயங்கும் அம்சமும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

நோக்கியா ஜி60 5ஜி ஸ்மார்ட்போன் இந்தியாவில் அறிமுகம் விலை & அம்சங்கள்

நோக்கியா ஜி60 5ஜி ஸ்மார்ட்போன் இந்திய சந்தையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த போனின் விலை மற்றும் சிறப்பு அம்சங்கள் குறித்து விரிவாக பார்ப்போம். இந்த போன் 5ஜி நெட்வொர்க்கை சப்போர்ட் செய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பின்லாந்து நாட்டின் ஹெச்.எம்.டி குளோபல் நிறுவனம் நோக்கியா போன்களை உற்பத்தி செய்து, உலகம் முழுவதும் விற்பனை செய்து வருகிறது. இந்தியாவில் நோக்கியா தற்போது ஜி60 5ஜி ஸ்மார்ட்போனை களம் இறக்கியுள்ளது.

சிறப்பு அம்சங்கள்:

- 6.58 இன்ச் ஃபுல் ஹெச்டி டிஸ்ப்ளே
- கொரில்லா கிளாஸ் 5 புராட்டெக்ஷன்
- ஸ்னாப்டிராகன் 695 5ஜி சிப்செட்
- 6ஜிபி ரேம் மற்றும் 128ஜிபி ஸ்டோரேஜ் வசதி
- ஆண்ட்ராய்டு 12 இயங்குதளம்
- மூன்று ஆண்டுகளுக்கான ஆண்ட்ராய்டு அப்டேட்
- பின்பக்கத்தில் மூன்று கேமரா. அதில் 50 மெகாபிக்சலை கொண்டுள்ளது பிரதான கேமரா
- முன்பக்கத்தில் 8 மெகாபிக்சல் கொண்ட கேமராவும் இடம் பெற்றுள்ளது
- 4,500mAh திறன் கொண்ட பேட்டரி
- 20 வாட்ஸ் சார்ஜிங் சப்போர்ட்
- இ-சிம் சப்போர்ட்
- டைப் சி யுஎஸ்பி போர்ட்
- வரும் 8-ம் தேதி முதல் இந்த போன் விற்பனைக்கு வர உள்ளது. இதன் விலை ரூ.29,999
- இந்த போனை முன்பதிவு செய்பவர்களுக்கு இலவசமாக நோக்கியா பவர் இயர்பட் கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

5 கோடி டவுன்லோடுகளை கடந்தது ட்விட்டரின் போட்டி நிறுவனமான 'கூ' தளம்

இந்தியாவை தலைமையிடமாக கொண்டு இயங்கி வரும் 'கூ' சமூக வலைதளம் 5 கோடி டவுன்லோடுகளை கடந்துள்ளது. சமூக வலைதள சேவையை வழங்கி வரும் இந்நிறுவனம், ட்விட்டருக்கு மாற்று என சொல்லப்படுகிறது. தமிழ் உட்பட மொத்தம் 10 மொழிகளில்இதன் சேவை கிடைக்கப்பெறுகிறது. கடந்த 2021 வாக்கில் இந்தியாவில் ட்விட்டருக்கு எதிரான கருத்துகள் எழுந்திருந்தது. அப்போது லைம்லைட்டுக்குள் வந்தது கூ. ட்விட்டரை போலவே இதிலும் பயனர்கள் பதிவுகளை பகிரலாம். கடந்த ஜனவரி முதல் இந்த தளத்தில் பயனர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து வருவதாக அந்த நிறுவனத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 7,500 ஹை-புரொபைல் பயனர்கள் உட்பட மில்லியன் கணக்கிலான மாணவர்கள், ஆசிரியர்கள், தொழில் முனைவோர்கள், கவிஞர்கள், தலைவர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், நடிகர்கள் என பலரும் தங்கள் சொந்த மொழியில் பதிவுகளை பகிர்ந்து வருவதாக 'கூ' தெரிவித்துள்ளது. இந்தியாவின் பல்வேறு மொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த காரணத்தால் தங்கள் நிறுவனம் இந்த வளர்ச்சியை எட்டியுள்ளதாக கூ நிறுவனத்தின் இணை நிறுவனரும், தலைமை செயல் அதிகாரியுமான அப்ரமேயா ராதாகிருஷ்ணா தெரிவித்துள்ளார். பல்வேறு தரப்பில் இருந்து முதலீடுகளை பெற்றுள்ளது கூ.தமிழ், இந்தி, மராத்தி, குஜராத்தி, பஞ்சாபி, கன்னடம், தெலுங்கு, ஆங்கிலம் போன்ற மொழிகளில் கூ இயங்கி வருகிறது.

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல

விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர்க்கு எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை

சினிமா செய்திகள்

ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கும் புதிய படத்தில் சிறப்புத் தோற்றத்தில் ரஜினி

லைகா நிறுவனத்துடன் ரஜினி 2 படங்களில் நடிக்க ஒப்பந்தம் போட்டுள்ள நிலையில், நாளை ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கும் புதிய படத்திற்கான பூஜை நடைபெறுகிறது. இந்தப் படத்தில் நடிகர் ரஜினிகாந்த் சிறப்புத் தோற்றத்தில் நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது.'பீஸ்ட்' படத்தைத் தொடர்ந்து இயக்குநர் நெல்சன், நடிகர் ரஜினியுடன் கைகோத்துள்ளார். 'ஜெயிலர்' என தலைப்பிடப்பட்டுள்ள இப்படத்திற்கு நெல்சனுடன் இணைந்து கே.எஸ்.ரவிக்குமார் திரைக்கதை எழுத உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அனிருத் இசையமைக்கும் இப்படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. ரம்யா கிருஷ்ணன், சிவராஜ்குமார், விநாயகன் நடிக்கும் இப்படத்தில் நாயகியாக தமன்னா நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது.இந்தப் படத்தின் படப்பிடிப்பு தீவிரமாக நடைபெற்று வருகிறது. , இந்தப் படத்தைத் தொடர்ந்து நடிகர் ரஜினிகாந்த் லைகா தயாரிப்பு நிறுவனத்துடன் இணைந்து அடுத்த இரண்டு படங்களில் நடிக்க உள்ளதாக ஒப்பந்தம் செய்துள்ளார். அதில் ஒரு படத்திற்கான பூஜை நாளை சென்னையில் நடைபெறுகிறது. இந்தப்படத்தை ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்க இருப்பதாகவும், அதில் நடிகர் ரஜினி சிறப்புத் தோற்றத்தில் நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்தப்படத்தில் விஷ்ணுவிஷால் நாயகனாக நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது.

மம்முட்டியுடன் இணைந்து நடிக்கும் விஜய்சேதுபதி

நடிகர் மம்முட்டியுடன் விஜய் சேதுபதி இணைந்து நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.'காக்கா முட்டை' படம் மூலமாகத் தமிழில் இயக்குநராக அறிமுகமானவர் இயக்குநர் மணிகண்டன். கடைசியாக இவரது இயக்கத்தில் 'கடைசி விவசாயி' படம் வெளியானது. விமர்சன ரீதியாக இந்தப் படம் நல்ல வரவேற்பைப் பெற்றது. இந்த நிலையில், இயக்குநர் மணிகண்டன் இப்போது தன்னுடைய அடுத்தப் படத்தை இயக்குவதற்குத் தயாராகி வருகிறார்.இந்தப் படத்தில்தான் நடிகர்கள் மம்மூட்டியும், விஜய்சேதுபதியும் இணைய இருக்கிறார்கள். படத்தின் ப்ரீ புரொடக்ஷன் பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டு இருக்கும் நிலையில் பல முன்னணி நடிகர்களும் இணைய வாய்ப்பிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது குறித்தான விவரம் விரைவில் படக்குழு தரப்பில் இருந்து வெளியாகும்.

இந்தியன் 2 வில் யுவராஜ் சிங் தந்தை

நடிகர் மம்முட்டியுடன் விஜய் சேதுபதி இணைந்து நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.'காக்கா முட்டை' படம் மூலமாகத் தமிழில் இயக்குநராக அறிமுகமானவர் இயக்குநர் மணிகண்டன். கடைசியாக இவரது இயக்கத்தில் 'கடைசி விவசாயி' படம் வெளியானது. விமர்சன ரீதியாக இந்தப் படம் நல்ல வரவேற்பைப் பெற்றது. இந்த நிலையில், இயக்குநர் மணிகண்டன் இப்போது தன்னுடைய அடுத்தப் படத்தை இயக்குவதற்குத் தயாராகி வருகிறார்.இந்தப் படத்தில்தான் நடிகர்கள் மம்மூட்டியும், விஜய்சேதுபதியும் இணைய இருக்கிறார்கள். படத்தின் ப்ரீ புரொடக்ஷன் பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டு இருக்கும் நிலையில் பல முன்னணி நடிகர்களும் இணைய வாய்ப்பிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது குறித்தான விவரம் விரைவில் படக்குழு தரப்பில் இருந்து வெளியாகும்.

METRO PEOPLE STAR RATING

4/5

METRO PEOPLE STAR RATING

3/5

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்

இறைவனுடைய திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர் பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க முடியும். மற்றவர் கடக்க முடியாது

விளையாட்டு செய்திகள்

ரிஷப் பந்த்தை உட்கார வைத்துவிட்டு தினேஷ் கார்த்திக்கை தேர்வு செய்வது முட்டாள்தனம்: இயன் சாப்பல்

நடப்பு டி20 உலகக் கோப்பையில் அனைத்துப் போட்டிகளிலும் ரிஷப் பந்த் தான் விளையாடி இருக்க வேண்டும். இவரை உட்கார வைத்துவிட்டு தினேஷ் கார்த்திக்கை ஆட வைப்பது முட்டாள்தனமானது என்று ஆஸ்திரேலிய கிரக்கெட் அணியின் ஜாம்பவானான இயன் சாப்பல் கருத்து தெரிவித்துள்ளார். இந்தத் தொடரில் பாகிஸ்தான், நெதர்லாந்து, வங்கதேச அணிகளை வீழ்த்திய இந்திய அணி, தென் ஆப்பிரிக்காவிடம் பேட்டிங் பலவீனத்தை வெளிக்காட்டித் தோல்வி அடைந்தது. ஆனால், அட்டவணையில் 6 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்தாலும் தென் ஆப்பிரிக்காவிடம் பேட்டிங்கில் சொதப்பியதும், வங்கதேச அணிக்கு எதிராக ஷமி உட்பட சிலர் பவுலிங்கில் சொதப்பியதும் இந்திய அணியின் பலவீனங்களை அரையிறுதிக்கு முன்னதாக அம்பலப்படுத்தியுள்ளது. கே.எல்.ராகுல் 3 ஆட்டங்களில் சொதப்பி கடைசியில் வங்கதேசத்துக்கு எதிராக ஃபார்முக்கு வந்தார். இவருக்காக ரிஷப் பந்த் உட்கார வைக்கப்பட்டுள்ளார். ஆனால், இயன் சாப்பல் என்ன கூறுகிறார் எனில், ஆடும் லெவனில் தினேஷ் கார்த்திக்கை எடுத்தது முட்டாள் தனம் என்றும், ரிஷப் பந்த் ஒவ்வொரு போட்டியிலும் ஆட வேண்டும் என்றும் கூறியுள்ளார். ராகுல், தினேஷ் கார்த்திக்கை நீக்காவிட்டாலும் அக்சர் படேல் என்பவரை அணியில் எடுத்து வெறும் சில ஓவர்கள் கொடுப்பதற்கு பதில் ரிஷப் பந்த்தை அணியில் எடுக்கலாமே. அல்லது தீபக் ஹூடாவை எடுத்து அந்தப் பிட்ச்களில் அவரது நம்பிக்கையை காலி செய்வதற்குப் பதிலாக ஆஸ்திரேலியாவில் ஆடிய அனுபவம் பெற்ற ரிஷப் பந்த்தை அணியில் எடுக்க வேண்டும். ஏதாவது ஒரு ஸ்லாட்டில் அவரது ஆக்ரோஷ அதிரடி ஆட்டம் பயனளிக்கும் என்பது அனைவரின் ஆதங்கமாக உள்ளது. இந்நிலையில், இயன் சாப்பல் ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்றுக்கு கொடுத்த பேட்டியில் கூறும்போது,

டிம் டேவிட் சர்வதேச அளவில் என்ன செய்து விட்டார்? சில வேளைகளில் அணித் தேர்வாளர்கள் உள்நாட்டு கிரிக்கெட் ஃபார்மை வைத்து வீரர்களை தேர்வு செய்கின்றனர். இதற்கு ஒரு சிறந்த உதாரணம் இந்தியா, அவர்கள் ரிஷப் பந்த்திற்கு பதிலாக தினேஷ் கார்த்திக்கை பிளேயிங் லெவனில் தேர்வு செய்கின்றனர். இது பெரிய முட்டாள்தனம், நான் என்ன சொல்கிறேன் என்றால் ரிஷப் பந்த் ஒவ்வொரு போட்டியிலும் இந்த உலகக் கோப்பையில் ஆடியிருக்க வேண்டும் என தெரிவித்துள்ளார். மேலும், அந்தப் பேட்டியில் டிம் டேவிட்டை பற்றி கூறும்போது, உள்நாட்டு கிரிக்கெட்டில் தனியார் லீகுகளில் மணிக்கு 120 கிமீ வேகம் வீசும் பவுலர்களை விளாசுவதை வைத்து சர்வதேச போட்டிகளுக்கு தேர்வு செய்தால் அங்கு மணிக்கு 150 கிமீ வேகம் வீசும் பவுலர்களை எப்படி அடிக்க முடியும். அதனால்தான் சில சர்வதேசப் போட்டிகளையாவது ஆடவிட்டு பிறகு உலகக் கோப்பை போன்ற பெரிய தொடர்களில் ஒரு வீரரைத் தேர்வு செய்ய வேண்டும். மணிக்கு 150 கிமீ வேகம் வீசும் பவுலர்களை இஷ்டத்துக்கு விளாசுவதெல்லாம் சுலபமானதல்ல என்கிறார் இயன் சாப்பல். நடப்பு உலகக் கோப்பையில் மெல்போர்னில் பாகிஸ்தானுக்கு எதிராக 10 பந்தில் 1 ரன், நெதர்லாந்துக்கு எதிராக பேட்டிங் செய்யவில்லை. தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக அவருக்கு நல்ல வாய்ப்புக் கிட்டியது. அவர் இறங்கும்போது இந்தியா தடுமாறிக் கொண்டிருந்தது 10 ஓவர்கள் மீதமிருந்தன. தினேஷ் கார்த்திக்கிற்கு உண்மையான திறமை இருந்திருந்தால் இந்தப் பிட்சில் 30-35 ரன்கள் எடுத்திருந்தாலே போதும். அதன் மூலம் அணியில் தனது தேர்வு குறித்து அவர் நியாயப்படுத்தியிருப்பார். ஆனால் 15 பந்துகளில் 6 ரன்களில் கேட்ச் ஆகி வெளியேறினார். கடைசியாக வங்கதேசத்திற்கு எதிராக 7 ரன்களில் கோலி ஸ்ட்ரைக்கில் இருக்கும் போது, இல்லாத ஒரு சிங்கிள் வாய்ப்புக்காக ஓடி, தேவையில்லாமல் ரன் அவுட் ஆனார். இந்த ஸ்கோர்களுக்கு முன்பாகவும் அவர் சர்வதேச கிரிக்கெட்டில் பெரிய இன்னிங்ஸ்களை ஆடிவிடவில்லை. மேலும் ரிஷப் பந்த் தான் ஒரு நிகழ்கால ஸ்டார் என்பதை நிரூபித்துள்ளார். எதிர்காலக் கேப்டன், உலக பவுலர்கள் நடுங்கும் ஒரு இடது கை ஆட்டக்காரர், மாடர்ன் டே கில்கிறிஸ்ட், ஜெயசூர்யா ரக அதிரடி வீரர். அவரை உட்கார வைத்துவிட்டு தினேஷ் கார்த்திக்கை எடுக்கலாமா என்பதுதான் இயன் சாப்பலின் கேள்வியும். அது பல ரசிகர்களின் கேள்வியுமாக கூட இருக்கிறது.



ஐபிஎல் 2023 ஜடேஜா வேண்டும்: சிஎஸ்கே நிர்வாகத்திடம் தோனி கேட்டதாக தகவல்

எதிர்வரும் ஐபிஎல் சீசனில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் ஆல் ரவுண்டர் ஜடேஜாவின் இருப்பு மிகவும் அவசியம் என அணி நிர்வாகத்திடம் தோனி சொல்லியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதனால் ஜடேஜா சென்னை அணியுடன் தனது பயணத்தை மீண்டும் தொடர வாய்ப்புகள் அதிகம் என நம்பப்படுகிறது. சென்னை சேப்பாக்கத்தில் நடைபெறும் ஆட்டங்களில் ஜடேஜா தேவை என்றும், அவரது இடத்தில் மாற்று வீரரை நிரப்ப முடியாது என்றும் சிஎஸ்கே கேப்டன் தோனி தெரிவித்துள்ளதாக சொல்லப்படுகிறது. கடந்த சீசனில் அணி நிர்வாகம் மற்றும் ஜடேஜா தரப்பில் கருத்து முரண் ஏற்பட்டது.

அந்த சீசனில் அவர் கேப்டனாக நியமிக்கப்பட்டார். பின்னர் அந்தப் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டார். அதோடு சீசன் முடிவதற்குள் தொடரில் இருந்து விலகினார். அதனால் அவர் அடுத்த சீசனில் சென்னை அணியில் விளையாடுவது சந்தேகம் என சொல்லப்பட்டது. இந்த நிலையில், வரும் டிசம்பர் 16-ம் தேதி அடுத்த சீசனுக்கான ஏலம் நடைபெற உள்ளது. அதற்கு முன்னர் 10 அணிகளும் தாங்கள் தக்கவைத்துள்ள வீரர்களின் விவரத்தை வெளியிட வேண்டும். இதற்கான கேடு தேதி வரும் 15-ம் தேதி என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழலில்தான் தோனி இதனை சொல்லியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அவர் விடுவிக்கப்பட்டால் பல்வேறு ஐபிஎல் அணிகள் அவர் ஏலத்தில் எடுக்க முன்வர வாய்ப்புள்ளது. சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக 142 போட்டிகளில் ஜடேஜா விளையாடி உள்ளார். 1440 ரன்கள் எடுத்துள்ளார். அதே நேரத்தில் 105 விக்கெட்டுகளையும் கைப்பற்றி உள்ளார். அபார ஃபீல்டரான அவர் 69 கேட்ச்களையும் பிடித்துள்ளார். தற்போது காயம் காரணமாக அவர் டி20 உலகக் கோப்பை தொடரில் விளையாடவில்லை. வெகு விரைவில் அவர் இந்திய கிரிக்கெட் அணியில் கம்பேக் கொடுக்க உள்ளார்.

வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று

மழை பெய்ய உலகம் வாழ்ந்து வருவதால், மழையானது உலகத்து வாழும் உயிர்களுக்கு அமிழ்தம் என்று உணரத்தக்கதாகும்

ஜெயலக்ஷ்மி அம்மையார் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு தினம்

ஜெயலக்ஷ்மி அம்மையார் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி பாலகிருஷ்ணன் அறக்கட்டளை மற்றும் தமிழக வாகன ஓட்டுனர்கள் மற்றும் தொழிலாளர்கள் நல சங்கத்தின் நிறுவனத் தலைவர் டாக்டர் சுகுமார் பாலகிருஷ்ணன் அவர்களின் அறிவுறுத்தலின்படி **(Chennai Feeding Hearts)** தொண்டு நிறுவனத்திற்கு 150 கிலோ அரிசி மூட்டைகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் **S**.சுரேந்திரன் அவர்களால் வழங்கப்பட்டது. உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் **S**.துரைராஜ் செயற்குழு உறுப்பினர்கள்: **M**.ரவிக்குமார், **A**.ஹரிபாபு, **K**.லோகநாதன், உறுப்பினர்கள் : **S**.சிலம்புச் செல்வன் **J**.கலையரசன் மற்றும் சூர்யா ஆகியோர் இருந்தனர்.

பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் குரு பூஜை



பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் குரு பூஜையை முன்னிட்டு தமிழக வாகன ஓட்டுனர்கள் மற்றும் தொழிலாளர்கள் நல சங்கத்தின் சார்பில் அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர் உடன் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

உலக செய்திகள்

ட்விட்டர் ப்ளூ டிக் கட்டண விவகாரம்: எலான் மஸ்க் Vs அலெக்ஸ்சாண்டிரியா

ட்விட்டரில் ப்ளூ டிக் வசதிக்கு 8 டாலர்களை மாதக் கட்டணமாக விதிக்கப்படுவது தொடர்பாக, அந்த வலைதளத்தின் புதிய உரிமையாளரான எலான் மஸ்க்கும், அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் அலெக்ஸ்சாண்டிரியா -வுக்கு இடையே வார்த்தைப் போர் வெடித்தது. கடந்த ஏப்ரல் இறுதியில் சமூக வலைதள நிறுவனமான ட்விட்டர் நிறுவனத்தை எலான் மஸ்க் வாங்கி இருந்தார். எனினும், இருதரப்புக்குமான டீல் இழுபறியாக இருந்து வந்தது. இது தொடர்பாக நீதிமன்றம் வரை பஞ்சாயத்து சென்ற நிலையில், ஒருவழியாக ட்விட்டர் உரிமை எலன் மஸ்க்கிடம் வந்துள்ளது. இந்தநிலையில், அந்நிறுவனத்தின் உரிமையாளர் என்ற முறையில் பல்வேறு மறுசீரமைப்பு பணிகளை மஸ்க் மேற்கொண்டு வருகிறார். அந்த வகையில் பயனர்களின் அடையாளங்களை உறுதிப்படுத்தும் ப்ளூ டிக் வசதிக்கு 8 டாலர்களை மாதாந்திரக் கட்டணமாக வசூலிக்கப்படும் என்று எலான் மஸ்க் அறிவித்துள்ளார். இந்தக் கட்டண முறைக்கு ப்ளூ டிக் வைத்திருக்கும் பயனாளர்கள் பலரும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். எனினும், தனது முடிவில் எலான் மஸ்க் தீர்க்கமாக இருக்கிறார். அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் அலெக்ஸாண்ட்ரியா ஒகாசியோ - கோர்டெஸ் இம்முடிவை கிண்டல் செய்து கருத்து சுதந்திரம் என்ற பெயரில் பில்லியனர், மக்களை விற்க முயற்சிக்கிறார். அதுதான் 8 டாலர் திட்டம் என்று பதிவிட்டிருக்கிறார். இதற்கு எலான் மஸ்க், உங்கள் கருத்துகள் பாராட்டுக்குரியது. தற்போது 8 டாலரை கட்டுங்கள் என்று பதிவிட்டுள்ளார். மேலும், அலெக்ஸ்சாண்டிரியாவின் தொழிற்சங்கங்கள் மூலம் விற்கப்படும் டீ-ஷர்ட் கட்டணம் குறித்தும் எலான் மஸ்க் மறைமுகமாக கேள்வி எழுப்பி இருந்தார். இதற்கு அலெக்ஸ்சாண்டிரியா பதிலளித்தபோது, இதனை நான் எப்போது பெருமையாகவே கொள்வேன். எனது தொழிலாளர்கள் பணியிடங்களில் இனவெறிக்கு உட்பட்டவர்கள் அல்ல. இங்குள்ள பொருட்கள் அமெரிக்காவில் தயாரிக்கப்படுகின்றன. எங்கள் குழு உழைக்கும் மக்களை கௌரவிக்கிறது, மதிக்கிறது என்று பதிவிட்டுள்ளார்.

ஒரே நாளில் 10 ஏவுகணை சோதனை: வட கொரியா மீது தென் கொரியா குற்றச்சாட்டு

வட கொரியா (நவ.2) மட்டும் சுமார் 10 ஏவுகணை பரிசோதனைகளை நடத்தி இருக்கிறது என்று தென் கொரியா தெரிவித்துள்ளது. இதுகுறித்து தென் கொரிய தலைமை ராணுவ அதிகாரி ஷின் சல் செய்தியாளர் சந்திப்பில் பேசும்போது, 'வட கொரியாவின் செயல் நிச்சயம் ஏற்றுக் கொள்ள முடியாதது. வட கொரியா இன்று மட்டும் சுமார் 10 ஏவுகணை சோதனைகளை நடத்தியது. இந்த முறை ஏவுகணைகள் தென் கொரிய கடற்பகுதியில் விழுந்தது என்றார். தென் கொரியாவும், அமெரிக்காவும் கொரிய கடற்பகுதியில் கூட்டாக ராணுவ பயிற்சி மேற்கொண்டுள்ளன. இதற்கு வட கொரியா கடும் கண்டனம் தெரிவித்தது. இது குறித்து கண்டன அறிக்கையை வட கொரியா வெளியிட்டது. அதில், அமெரிக்காவும் தென் கொரியாவும் வட கொரியாவுக்கு எதிராக ஆயுதப் படைகளைப் பயன்படுத்த முயற்சித்தால், வட கொரியா இதற்கான எதிர்வினையை தாமதிக்காமல் செய்யும். வரலாற்றில் மிக மோசமான விலையை அமெரிக்காவும், தென் கொரியாவும் கொடுக்க நேரிடும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் இந்த ஏவுகணை பரிசோதனையை வட கொரியா நடத்தியுள்ளது. வட கொரியாவின் இந்த நடவடிக்கையை அத்துமீறல் என்று ஐக்கிய நாடுகள் சபை கண்டித்துள்ளது. இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் வட கொரியா இதுவரை 20-க்கும் மேற்பட்ட ஏவுகணை சோதனைகளை நடத்தி உலக நாடுகளை அதிர்ச்சியடையச் செய்திருக்கிறது. கரோனா காரணமாக மோசமான நிலையை அடைந்துள்ள பொருளாதாரத்தைக் கவனிக்காமல் வட கொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை மேற்கொள்வதிலேயே கவனம் செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் இஸ்ரேல் பிரதமராகிறாரா பெஞ்சமின் நெதன்யாகு? - கருத்துக் கணிப்பில் சாதகம்

இஸ்ரேல் பிரதமராக பெஞ்சமின் நெதன்யாகு மீண்டும் பெரும்பான்மையுடன் ஆட்சியில் அமர்வார் என்று தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. 2009 ஆம் ஆண்டிலிருந்து இஸ்ரேலின் பிரதமராக நெதன்யாகு பதவி வகித்தார். இந்த நிலையில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மீது ஊழல், மோசடி மற்றும் நம்பிக்கை மோசடி புகார்கள் கடந்த சில வருடங்களாக எழுந்து வந்தன. நெதன்யாகு பதவி விலகக் கோரி ஜெருசலேம் உள்ளிட்ட பகுதிகளில் போராட்டங்களும் நடைபெற்று வந்தன. எனினும் தொடர்ந்து நெதன்யாகு தனது பதவியைத் தக்கவைத்து வந்தார். இந்த நிலையில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் நெதன்யாகுவின் லிகுட் கட்சி அதிக இடங்களில் வென்றது. ஆனாலும் பெரும்பான்மைக்குத் தேவையான இடங்கள் கிடைக்கவில்லை. இதனைத் தொடர்ந்து ஆட்சியைத் தக்கவைப்பதில் நெதன்யாகுவுக்குச் சிக்கல் நீடித்து வந்தது. இந்நிலையில் இஸ்ரேலில் அரபுக் கட்சி தலைமையில் வலதுசாரி அரசியல் கட்சிகள் கூட்டாக இணைந்து நெதன்யாகுவின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தன.இந்தச் சூழலில் நேற்று இஸ்ரேலில் நான்கு ஆண்டுகளில் 5வது முறையாக பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. வாக்குப் பதிவுகள் இன்று எண்ணப்பட்டு முடிவுகள் இன்றே அறிவிக்கப்பட உள்ளன. அதிபர் தேர்தலில் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று நெதன்யாகு ஆட்சி அமைப்பார் என்று தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்பு முடிவுகள் தெரிவிக்கின்றன. இதுகுறித்து இஸ்ரேல் அதிபர் நெதன்யாகு, மக்களின் நம்பிக்கையை நாங்கள் பெற்றுள்ளோம். மக்கள் மாற்றுப் பாதையை தேர்வு செய்திருக்கிறார்கள். மக்களுக்கு பாதுகாப்பும், அதிகாரமும் வேண்டும். மிகப் பெரிய வெற்றியின் விளிம்பில் இருக்கிறோம். நிலையான அரசை நாம் அளிப்போம் என்றார்.

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை

கேட்காதசெவி, பார்க்காத கண் போன்ற எண் குணங்களை உடைய கடவுளின் திருவடிகளை வணங்காதவரின் தலைகள் பயனற்றவைகளாம்

CELEBRITY WISHES









INNOKAIZ INDIA LIMITED 20TH YEAR ANNIVERSARY

INNOKAIZ INDIA LIMITED Celebrated 20th Year Anniversary in Chennai Head office. As a chief guest Dr. Sukumarbalakrishnan (Chairman & Managing Director of JB GROUP) and Mr. Durai Raj (Director of INNOKAIZ) Joined and celebrated the event with office staff. INNOKAIZ INDIA LIMITED is a 19 years old E-commerce and Product Retail & Wholesale Based Company. Every 1st of November they celebrate the day as INNOKAIZ Day remembering the first PO They Received from ICICI Lombard.

CHENNAI

MONSOON IMPACT: WATER TO BE RELEASED FROM CHEMBARAMBAKKAM, PUZHAL?

Following rains lashing out TN districts and Chennai in particular, the authorities have informed water would be released from Chembarambakkam and Puzhal reservoirs today at 3 PM. It was reported by Thanthi tv that 100 cusecs each from both the reservoirs would be released. The low amount of water will be released to avoid flooding in low-lying areas in Chennai. This announcement comes in the heels of IMD report that rains will continue in Tamil Nadu till November 6.

METRO PEOPLE
English & Tamil Weekly

Editor:
S. SUDHA

Sub-Editor:
S. Surendran

Reporter:
S.S. Anand
M. Saravanan

Photographer:
A.K. Karthick

Layout Artist:
R. Kishore Kumar

Publication Address

Door No. Mount Chamber, (office No.f) 2nd Floor , Door No.190,old No.758a, AnnaSalai, chennai - 600 002

75500 01222

M.K.STALIN AND MAMATA ATTEND BENGAL GUV'S FUNCTION IN CHENNAI

West Bengal Chief Minister Mamata Banerjee, Tamil Nadu Chief Minister M.K. Stalin, and Megastar Rajinikanth were among the celebrities who attended the birthday celebrations of the elder brother of West Bengal Governor L.Ganeshan. The birthday function was held at Ram Theater auditorium near Kodambakkam. BJP former national secretary and senior leader from Tamil Nadu, H. Raja also participated in the function. After the West Bengal Governor, Jagdip Dhankar became the Vice President of the country, the incumbent Manipur Governor, L. Ganeshan was given additional charge of the Governor of West Bengal. Ever since Ganeshan assumed office, there has been a marked bonhomie with the Chief Minister Mamata Banerjee, which was noted with interest by the social and political circles of West Bengal. Mamata and Jagdip Dhankar were fighting with each other most of the time. The BJP, which got a drubbing in the 2021 Assembly elections in West Bengal, seems to be trying to create an understanding with Mamta Banerjee, who is plagued by the continuous raids by the Enforcement Directorate and the CBI.However on Wednesday, immediately after arriving in Chennai, Mamata Banerjee called on the Chief Minister of Tamil Nadu, M.K. Stalin. The Tamil Nadu government is fighting a battle with Governor R.N. Ravi, and the DMK has written to all the opposition parties to sign a memorandum to be submitted to the President Droupadi Murmu for recalling the present Governor.

MAMATA PLAYS DRUMS AT FAMILY FUNCTION OF WB GOVERNOR IN CHENNAI

West Bengal chief minister Mamata Banerjee played drums as she arrived for a family function of Governor La Ganesan in Chennai. A video showed Banerjee greeting drummers with folded hands. She then went on to play the drums as the drummers cheered. The video garnered several reactions on Twitter. The BJP IT-cell's Mumbai unit also reacted to the Bengal chief minister's act. Sharing an old video of Banerjee doing the Garba as she kicked off Durga Puja festivities in Kolkata in September this year, BJP Mumbai IT cell's co-convener Pallavi CT tweeted, "Nothing can stop this amazing cultural participation by Didi O' Didi. PT exercise dandiya." Banerjee arrived in Chennai on Wednesday to attend the function. She also met with Tamil Nadu chief minister MK Stalin. Calling Stalin her brother, Banerjee said, "I came to attend a family function but could not have left without meeting Stalin. Two political leaders together can talk about things other than politics. We did not discuss anything about politics," she said. "I think it is my duty to meet Stalin Ji and have a cup of coffee, which is popular in Chennai and we said Namasthe and Vanakkam," she added.Stalin hailed Banerjee as a dynamic personality and said her visit was a courtesy call. The Tamil Nadu chief minister added that he has accepted Banerjee's invitation to visit Kolkata.

ANNAMALAI, PARTY CADRES BOOKED FOR PROTESTING WITHOUT PERMISSION

City Police have booked Tamil Nadu BJP President, K Annamalai and more than 350 party cadres, including party leaders, VP Duraiswamy, for unlawful gathering at Valluvar Kottam on Tuesday demanding action against DMK spokesperson Saidai Sadiq for his derogatory remark against women leaders of the saffron party. On Tuesday evening, party cadres led by Annamalai gathered at Valluvar Kottam and condemned the DMK functionary for his disparaging statement against the party women leaders Khushbu Sundar, Gayathri Raghuram, Namitha, Gautami Tadimalla and a few others. The four actors did not participate in the protest. They were rounded up by the police and detained at a wedding hall in the vicinity and relased later in the evening. Subsequently, Nungambakkam police have booked Annamalai and the cadres under Sections of the IPC, including 143 (unlawful assembly), 290 (public nuisance), 353 (deterring public servant from discharge of duty) among others. The Cyber Crime wing of Chennai City Police have booked a DMK functionary, Saidai Sadik for his derogatory remarks on woman actors who have joined the BJP. Sadik made the remarks at an event celebrating the achievements of DMK government, held at RK Nagar recently. A video clip of his speech went viral in social media and was criticised widely, including DMK MP, MK Kanimozhi, who too took to Twitter and condemned the remarks made against women and said that the party doesn't condone such views.

Taiyangxi®
paradigm of happiness

BUILD YOUR DREAM HOME

Design - Construction - Interior - Maintenance

We will take care of all your BURDENS

Build your Home TENSION FREE

No Hidden Costs

Starts from INR 2000/- per sq ft

+91 98405 56824

TAIYANGXI PROPERTIES & INFRASTRUCTURE PVT LTD
Door No.43. Old No.22, "REAL ENCLAVE" Basement (Office No.B1)
Josier Street, Nungambakkam, Chennai - 600 034.
